**நாள்:** 12.11.2025

**O.S. No. 45/2022**

**பி.வா.சா.1**

**பெயர்: மகேந்திரன் , த/பெ. மாரியப்பன்**

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

என்ன பரிகாரம் கோரி எனக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. என் தகப்பனார் மற்றும் தாயார் பெயர் என்ன என்றால் மாரியப்பன் - வள்ளியம்மை. என் தகப்பனார் எப்போது காலமானார் என்றால் 2014 ல் காலமானார். என் தாயார் எப்போது காலமானார் என்றால் 2002 ல் காலமானார். என் தகப்பனார் பெயரில் உள்ள சொத்துகள் குறித்து தெரியுமா என்றால் சர்வேஎண் சரியாக தெரியாது. விசுவாமித்திரபுரம் கிராமம் கீழகாவாதுகுடி பஞ்சாயத்தில் சர்வேஎண் 59/5 ல் 100 ஏர்ஸ் இருந்தது. அதை எல்லாம் விற்றுவிட்டார்கள். வேறு நிலங்கள் உள்ளதா என்றால் இல்லை. எதன் அடிப்படையில் மேற்படி என் தகப்பனார் பெயரில் உள்ள சொத்துகள் விற்பனை செய்யப்பட்டது என்றால் என் தகப்பனார் உயிருடன் இருந்த காலத்திலேயே என் சகோதரர் வீரமணி , சேகர் , சகோதரி தனம், வெண்ணிலா ஆகியோருக்கும் என் தகப்பனாரின் முதல் மனைவியான சின்னம்மாள் பெயரில் சுமார் 120 குழியும் பிரித்துகொடுத்துவிட்டார்கள். எனக்கும் கடைசியாக பிரித்து கொடுத்தார்கள். மேற்படி எனது சகோதர சகோரிகளுக்கு பாகப்பிரிவினைக்கான பத்திரம் எழுதப்பட்டதா என்றால் வாய்மொழியாக என் தகப்பனார் பேசி பிரித்துகொடுத்ததுதான். அவ்வாறு வாய்மொழியாக பிரித்துகொடுத்தபோது நான் வெளிநாட்டில் இருந்தேன். நான் ஊருக்கு திரும்பிய பிறகு என் தகப்பனார் எனக்குள்ள பாகத்தை கொடுத்து பத்திரபதிவு செய்து கொடுத்தார். மற்றவர்களுக்கும் முன்னரே பதிவு பத்திரம் செய்துகொடுத்துள்ளார். என் தகப்பனார் எனக்கு எழுதிகொடுத்த பதிவு பாக பத்திரத்தை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

தாவா சொத்தானது என் தகப்பனாரால் கிரயம் பெறப்பட்ட சொத்தா என்றால் என் தாயார் என் தகப்பனாருக்கு எழுதிகொடுத்த சொத்து. என் அப்பா அம்மாவிடம் தாவா சொத்து சாகுபடி சொத்தாக இருந்தது. வா.சா.ஆ. 1 ஆவணம் தாவா சொத்தை என் தாயார் வள்ளியம்மை கிரயம் பெற்றது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

தாவா சொத்தை பொறுத்து என் தாயார் உயில் ஆவணம் எதுவும் எழுதி வைத்தாரா என்றால் இல்லை. என் தாயாருக்கு மொத்தம் எத்தனை பேர்கள் வாரிசு என்றால் என்னை சேர்தது ஐந்து பேர் வாரிசுகள் ஆகும். என் தகப்பனார் கீழே விழுந்து அடிபட்ட காரணத்தால் மயக்க நிலையில் சுயநினைவு இன்றி இருந்தாரா என்றால் வாதி வீட்டில் என் தகப்பனார் கீழே விழுந்து அடிப்பட்டு கவனிப்பின்றி இருந்து புழுபிடிக்க இருந்து வந்தவரை நான் திருவாரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சை அளித்தும் பின்னர் தனியார் மருத்துவமனையில் கவனித்து வந்தும் உடல் நலம் சரிசெய்து நான் தான் பார்த்து வந்தேன். சிகிச்சைக்கு பிறகு அவர் நல்ல நிலையில் தான் இருந்தார். சிகிச்சைக்கு பிறது நல்ல நிலையில் இருந்து 3 ம் நபருக்கு சொத்துகளை விற்பனை செய்துள்ளார். என்னிடம் காட்டப்படும் கடந்த 06.12.2013 தேதிய தினமலர் தமிழ் நாளிதழில் என் தகப்பனார் குறித்து வந்துள்ள செய்தி உண்மைதான் என்றால் சரிதான். (**கடந்த 06.12.2013 தேதிய தினமலர் தமிழ் நாளிதழ் திருச்சி பதிப்பு பக்கம் 6 ல் கண்ட குறியீடு செய்யப்பட்டுள்ள செய்தி பிரதி- வா.சா.ஆ. 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). நான் என் தகப்பனாரை சிகிச்சைக்கு அழைத்து சென்று கவனித்து வந்தது தொடர்பாக ஆவணங்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் கைவசம் உள்ளது தேவைப்படும்பொழுது தாக்கல் செய்வேன். என் தாயார் தாவா சொத்தை திருவாரூர் கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்திடம் அடமானம் வைத்திருந்தாரா என்றால் ஆமாமம். 1998 ஆம் ஆண்டு அடமானம் வைத்திருந்தார். மேற்படி 1998 ம் ஆண்டு வைத்த அடமான கடனை என் சகோதரன் வாதி வீரமணிதான் முழுமையா பைசல் செய்து வரவு ரசீது பெற்றார் என்றால் சரியல்ல. 1998 ம் ஆண்டு முதல் நானும் என் தகப்பனாரும் சேர்ந்து மேற்படி தொகையை செலுத்தி வந்தோம் கடைசியாக தொகை முடிக்கபட்ட பிறகு ரசீதை வாதி பெற்றுகொண்டிருக்கலாம்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்தி வைக்கப்படுகிறது.

//மேற்படியார் தரப்பில் இன்றைய குறுக்கு விசாரணையின்போது **வா.சா.ஆ.11** ஆவணம் மட்டும் குறியீடு செய்யப்பட்டது.//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2025.11.12 18:05:28 +0530